DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 244/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W. 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : முத்துகுமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 10.07.2025.

முதல் விசாரணை

நான் தற்போது பெதப்பம்பட்டி புதுப்பாளையம் கிளை வாய்க்கால் பிரிவில் நீர்வளத்துறையில் உதவி பொறியாளராகவும் தளி கிளை வாய்க்கால் பிரிவில் முழு கூடுதல் பொறுப்பாகவும் பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்தின் போது தளி நான் கிளை வாய்க்கால் பிரிவில் உதவி பொறியாளராகவும் பூலாங்கிணறு வாய்க்கால் பிரிவில் முழு கூடுதல் பொறுப்பாகவும் பணியில் இருந்தேன். கடந்த 30.04.2022 ம் தேதி காலை 11.00 மணிக்கு கடை மடை விவாசாயிகளுக்கு தண்ணிர் சரியாக வரவில்லை என்று புகார் வந்ததால் தணிக்கை செய்வதற்காக நானும் வெனசப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் மஞ்சுளாதேவி மற்றும் உதவியாள் சௌந்தர் ஆகியோருடன் கூட்டு புல தணிக்கை செய்தோம். புதுப்பாளையம் கிளை கால்வாய் சாட்சி மீண்டும் பூலாங்கிணறு கிளை கால்வாயில் புல தணிக்கை செய்தோம். 27.04.2022 –12.05.2022 வரை முதல் சுற்றில் 5 நனப்பிற்கு தண்ணீர் விட வேண்டும கடை மடைக்கு தண்ணீர் வராததால் புகார் வந்தது. பூலாங்கிணறு கிளை கால்வாயில் மைல் 6 பரலாங்கு 7 அடி 295 அதில் 6 வது மடையில் 2 பரலாங்கு 225 அடியில் உள்ள வாய்க்காலில் மூலம் பாசன நீர் பூமியில் வாய்க்காலிலிருந்து தண்ணீர்

பாசன பகுதிக்கு மட்டும் விட வேண்டும். ஆனால் தோட்டத்தில் வாய்க்காலிருந்து மண் வாய்க்கால் மூலம் கிணற்றுக்கு சட்ட விரோதமாக தண்ணீர் விடப்பட்டிருந்தது. கிணற்றின் எல்லை பகுதியில் அந்த வாயக்காலிற்கு மேல் ஒரு கட்டமைப்பு ஏற்படுத்தில் அதில் தண்ணீர் விழும் படி வைத்திருநதார். அந்த பூமி சௌந்தர்ராஜன் த/பெ பழனிசாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட பூமி ஆகும். சர்வே எண் 55 2 பி சர்வே எண் பற்றி கிராம நிர்வாக அலுவலர் ஊர்ஜிதப்படுத்தினார். மின்சார இணைப்பு அளிக்கப்பட்டிருந்தது. அந்த மின்இணைப்பு எண் SC 22 ஆகும். சட்டத்திற்கு புறம்பாக தண்ணீரை ஆயக்கட்டு இல்லாத பகுதிக்கு தண்ணீர் பாய்ச்சி ஈடுபட வாய்ப்பு உள்ளதால் அலுவலகத்தில் வந்து புகாரை பதிவு செய்து அன்று மதியம் 3.00 மணியளவில் காவல் நிலையம் வந்த போது காவல் ஆய்வாளர் வெளியில் இருந்ததால் அடுத்த நாள் காலையில் வர சொன்னார்கள் நான் 01.05.2022 ம் தேதி யன்று காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும புகார் நான் கொடுத்தது தான் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார் அசா.ஆ .1 என குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவ இடத்தை என்னுடைய தனிப்பட்ட செல்போனில் புகைப்படம் எடுத்து அதன் நகலை கொடுத்துள்ளேன். அசலை தாக்கல் செய்ய இயலுமா என்றால் செல்போன் பழுதாகிவிட்டதால் எடுக்க இயலாது சாட்சி மீண்டும் Google photos ல் எடுத்து தர இயலும் என்று கூறுகிறார். 01.05.2022 ல் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதிரி சௌந்தர்ராஜன் பூமி ஆயக்கட்டிற்குபட்டது என்பது தெரியாது என்றால்என்றால் தெரியும் அவர் காயகட்டு உள்ளது அவருக்கு எவ்வளவு ஏக்கர் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. அதில் எவ்வளவு ஏக்கர் ஆயக்கட்டு பகுதி என்பது தெரியாது என்றால் அவருக்கு தெரியாது அவருக்கு எவ்வளவு தெரியாது, ஆனால் ஆயக்கட்டில் உள்ளது. அவருக்கு ஆயக்கட்டில் எவ்வளவு ஏக்கர் பூமி உள்ளது என்று தெரிந்து கொண்டிர்களா என்றாலும் எல்லா பூமியும் ஆயக்கட்டில் சேர்ந்ததா என்றும் தெரிந்து கொண்டிர்களா என்றால் மொத்த பூமி என்று தெரியாது, அவருக்கு ஆயகட்டில் எவ்வளவு உள்ளது என்பது பற்றி ஆவணத்தை பார்த்தால் தெரியும். புகார் கொடுப்பதற்கு முன்பாக எதிரிக்கு ஆய கட்டில் எவ்வளவு பூமி உள்ளது என்பதை பற்றி ஆவணங்களை பார்த்தது தெரிந்து கொள்ள வில்லை என்றால் சரிதான்.

2. விவசாயிகள் அவரது பூமிக்கு முறையான தண்ணீர் சேதாரம் இல்லாமல் பாய்ப்பதற்காக சொட்டு நீர் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ப்பது பழக்கம் என்றால் என்றாலும் அதற்கு கிணற்றுக்குள் விட்டு தான் தண்ணீர்

வைப்பார்கள் என்றால் அது போல் கிணற்றில் விட்டு தண்ணீர் பாய்க்கக்கூடாது என்பதுதான் சட்டத்தில் உள்ளது, கிராவிட்டியில் தான் பாய்க்க வேண்டும்.

3. ஆயக்கட்டில் ஒரு மடைக்கு எத்தனை நாள் தண்ணீர் வரும் என்றால் 5 நாட்கள். அந்த 5 நாட்கள் தண்ணீரரை விவசாயிகள் தங்களுக்குள் கெடு வைத்து பாய்த் கொள்வார்கள் என்றால் சரிதான். மணி கணக்கில் பங்கீடு செய்து பாய்த்து கொள்வார்கள் என்றால் சரிதான். அந்த மடைக்கு எத்தனை விவசாயிகள் உள்ளனர் என்று தெரியாது என்றால் அந்த மடைகக் சுமார் 20 விவசாயிகள்உள்ளனர். எதிரியின் பூமி எந்தெந்தகாலையில் எவ்வளவு ஏக்கர் பூமி உள்ளது என்று இதுவரை தெரியாது என்றால் ஆமாம். நான் பணி மாறுதல் ஆகிவிட்டேன். எதிரியின் பூமி ஆயக்கட்டில் இல்லாம்ல் இருந்ததால் தான் பாசனம் முறையற்ற பாசனமாக கருதப்படும் என்றால் சரியல்ல, அதை ஏற்க இயலாது.

4 . புகாரில் எத்தனை பேர் புகார் கொடுத்திர்கள் என்றால் கனகராஜ் மீது புகார் கொடுத்தேன். கனகராஜ் மீது போடப்பட்ட புகார் இந்த வழக்கிற்கு பின்னிட்டு போட்டதா என்றால் இதனுடன் போடப்பட்டது.அது இரண்டாவது மடையாகும். அமைப்பு போட்டு வைத்ததால் முறையற்ற பாசனம் என்று புகார் கொடுத்துள்ளிர்கள் என்றால் காவல் நிலையத்தில் புகாரில் இணைக்கப்பட்டுள்ள புகைப்படத்தில் அட்சரேகை மற்றும தீர்க்க ரேகை மற்றும் நாள் இடம் மற்றும் புகைப்பட நகல் கொடுத்துள்ளேன். புகைப்பட நகல் பற்றி சொல்லவில்லை என்றால் புகாரில் இணைப்பில் உள்ளது. வாய்க்காலில் தண்ணீர் வராத காலத்தல் கிணற்று பாசனம் செய்துவருகிறார்கள் என்றால் சரிதான். எதிரி சௌந்தர்ராஜ் சம்பவ இடத்தில் நீங்கள் செல்லும் போது இல்லை என்றால் சரிதான்.

5. எதன் அடிப்படையில் எதிரி தனக்கு தோட்டத்தில்பாசன நீரை விட்டு முறைகேட்டில் ஈடுபட்டதாக தெரியவந்தது என்றால் விஏஓ அவர் சொந்தமான தோட்டம் மற்றும் கிணறு என்று தெரிவித்தார். அதன் அடிப்பபடையில் புகார் கொடுத்திர்கள் என்றால் ஆமாம். காலையில் உங்களை போலிசார் எப்போது எங்கு வைத்து விசாரித்தார்கள்என்றால் SSI தங்கவேல் சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றேன். எத்தனை மணி என்றால் காலை 9.00 மணி இருக்கும் தோராயமாக.

6. யார் யார் சென்றிர்கள் என்றால் நானும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும உதவியாள் சௌந்தர். எத்தனை மணி வரை இருந்திர்கள் என்றால் 1 1/2 மணி நேரம் இருந்தோம். இந்த வழக்கிற்காக 3/4 மணி நேரம் இருந்தார்கள். எத்தனை மணிக்க சென்றிர்கள் என்றால் காலை 8.00 மணிக்கு சென்றோம். 11 .00 மணி வரை அங்கு இருந்தோம். வேறு யாராவது

வந்தார்களா என்றால் மற்ற இரு நபர்கள் வந்தார்கள். அவரது அதில் ஒருவர் எஸ் எஸ் ஐ அவரது பெயர் ஆவணத்தில் உள்ளது, பெயர் ஞாபகம் இல்லை, மறுபடியும் எஸ் எஸ் ஐ அழைத்து வந்து காவல் நிலையத்தில் விட்டீர்கள் என்றால் ஆமாம்.

7. ஆய கட்டிற்கு வந்து காலக்கெடு முறையில் தண்ணீர் பாயும் என்றாலும் அந்த காலக்கெடு அடிப்படையில் எதிரி சௌந்தரராஜன் இந்த சிஸ்டம் அடிப்படையில் தான் தண்ணீர் பாய்த்து வந்தார் என்றாலும் மற்ற விவசாயி களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றாலும் சரியல்ல. அந்த மடைக்கு சேர்ந்த விவசாயிகக் ளபுகார் கொடுக்கவில்லை என்றால் கடைமடை விவசாயிகள் தண்ணீர் வர வில்லை எனறு புகார் கொடுத்தார்கள் யார் புகார் கொடுத்தார் என்றால் உள்ளூர் காரர் என்பதால் நடை முறை சிக்கல் என்பதால் பெயர் சொல்ல இயலாது.

8. யார் எந்த விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லை என்றாலும் புள்ளி விவரக்கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரியின் முழு பூமியும் PAP ஆயக்கட்டிற்கு சேர்ந்தது என்றாலும் அந்த பூமிக்கு PAP தண்ணீர் பாய்த்து கொள்ளும் உரிமை உள்ளது என்றா்லும் புவியீர்ப்பு விசையில்அடிப்படையில் பாய்த்து கொள்ள இயலும் என்றாலும் கிணற்றுக்குள் விட்டு பாய்ப்பது சட்டத்திற்கு புறம்பானது. கிணற்றுக்குள் தண்ணீர் விட்டு பாய்ச்சுவது Agriculture Department ஆல் அங்கீகரிக்கப்பட்ட முறை என்றாலும் சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுப்படி சட்டத்திற்கு புறம்பானது, இந்த பகுதியில் தண்ணீர் பம்ப் செய்து எங்கு கொண்டு செல்வார்கள் என்று தெரியாது, ஆயக்கட்டு அல்லாத பூமிக்கு கொண்டு செல்ல வாய்ப்பு உள்ளது. நீங்கள் எதிரி அவரது ஆயக்கட்டு பகுதிக்கு முறையாக தண்ணிர் பாய்ச்சி வருகிறார் என்றால் சரியல்ல.

9. ஆயக்கட்டிற்கு சேராத பூமி என்ற விவரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் ஆமாம். அடுத்த நாள் உடன் விஏஓ காவல் நிலையம் வந்தாரா என்றால் இல்லை சம்பவ இடத்திற்கு வந்தார். எதிரி எந்த விதமான குற்ற செயலும் ஈடுபடவில்லை என்றாலும் கிணற்றுக்குளவிட்டு பாய்த்தாக வழக்கிற்காக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. சின்ன சின்ன விவசாயிகளை மிரட்டி பைன் கட்ட வேண்டி முடித்து கொள்ள ஒரே நாளில் முடித்து கொள்ள சொல்லியுள்ளிர்கள் என்றால் இல்லை, WP 10545/2015 WP 957/2016 என்ற உயர் நீதி மன்ற உத்தரவுப்படி மற்றும் உயர் அதிகாரிக்ள உத்தரவுபடியும் கடை மடை விவசாயிகளுக்கு தங்கு தடையின்றி செல்ல ஏதுவாக தண்ணீர் திருட்டை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்க புகார் கொடுக்கப்பட்டது

**<u>அரசு தரப்பில்  மறு விசாரணை</u>**

வாய்க்காலில் நீங்கள் புலத்தணிக்கை செய்த போது தண்ணீர் வந்ததா என்றால் ஆமாம்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகார் கொடுத்த போது கிளை வாய்க்காலில் தண்ணீர் வந்ததாக சொல்லியுள்ளிர்கள் என்றால் சொல்லியுள்ளேன். இந்த தேதியில் தண்ணீர் வந்ததால் தான் தணிக்கை செய்ய சென்றேன். அடுத்த நாள் போலிசாருடன் சென்ற போதுதண்ணீர் வந்ததா என்றால் வந்தது. அதுபற்றி SSI குறித்து கொண்டாரா என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 244/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | மஞ்சுளா தேவி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | விக்னேஷ்வரன் | ஜாதி | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலூக்கா | : | | வயது | : |
| Mail ID | : | | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 10.07.2025.

முதல் விசாரணை

நான் உடுமலை வட்டம் வாகை தொழுவு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். இந்த வழக்கு சமயத்தில் கணபதி பாளையம் மற்றும வெனசுப்பட்டி கிராமத்தில் ராம நிர்வாக அலுவலராக பணி செய்து வந்தேன். 30.04.2022 ம் தேதி நான் அலுவலகத்தில் இருந்த போது AE அசா.1 முத்துகுமார் பூலாங்கிணறு கிளை வாய்க்காலில் கடை மடை வாய்க்காலுக்கு தண்ணீர் செல்ல வில்லை என்று தணிக்கை செய்ய நான் மற்றும் AE முத்துகுமார் மற்றும பாசன உதவியாளர் செளந்தர்ராஜன் என்பவர்கள் 6 வது மடையில் பார்த்த போது அந்த வாய்க்கால் மடையில் ஒரு ஓட்டை போட்டு மண் வாய்க்கால் மூலமாக தண்ணீர் சென்றது. அதை பார்த்த போது செளந்தர்ராஜனுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் பைப் வழியாக தண்ணீர் விழுந்து கொண்டிருந்தது. AE முத்துகுமார் கிணற்றில் விட கூடாது என்றும் தண்ணீர்திருட்டுக்கு சமம் என்று கூறினார். அந்த நிலத்தை பற்றி விசாரித்தார். அந்த பூமி செளந்தர்ராஜன் என்பவருக்கு பாத்தியபபட்டது என்றும் சர்வே எண் 56 /2பி 3 வருடம் ஆகிவிட்டதால் சரியாக ஞாபகம் இல்லை என்று சொன்னார். அந்தகிணற்றின் சர்வீஸ் எண் சென்று

பார்த்தோம் சர்வீஸ் எண் 22ஆகும். வழக்கு சம்பந்தமாக அசா.1 புகார் கொடுத்தார் . போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. 56 /2பி என்று எதை பார்த்து தெரிந்து கொண்டிர்கள் என்றால் அடங்கல் மற்றும FMB பாரத்து தெரிந்து கொண்டேன். அதை எடுதது சென்றிர்களா என்றால் ஆமாம்.சௌந்தர்ராஜன் எவ்வளவு பூமி எந்தெந்த காலையில் உள்ளது என்றால் தெரியும் தற்போது ஞாபகம் இல்லை.அந்த பூமியில் அனைத்தும் PAP வாய்க்கால் பாசனத்திற்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். பூமிக்கு தண்ணீர் பாய்ச்சுவது கெடு போட்டு பகிர்ந்து கொண்டு தான் பாய்ச்சுவார்கள் என்றால் சரிதான். மேலும் இந்த பகுதியில் சிறப்பான பாசனத்திற்ககாக சொட்டு நீர் பாசனம் உள்ளது என்றால் சரிதான்.

2. எதிரியின் பூமியிலும் சொட்டு நீர் பாசனம் உள்ளது என்றால் சரிதான். தண்ணீர் பாயும் நேரத்தில் அது எதிரியின் கெடு என்று தெரிந்து கொண்டிர்களா என்றால் அது பற்றி தெரியாது. நீங்கள் போகும் போது மண்ணில் ஓட்டை போட்டதாக சொன்ன சங்கதியை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளிர்களா என்றால் இல்லை.

3. போலிசார் எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் 3.05.2022 ம் தேதி அவர்கள் சொன்னபோது நாங்கள் சம்பவ இடததிற்கு சென்றோம் தேதி சரியாக ஞாபகம் இல்லை. போன போது என்ன மணி இருக்கும் என்றால் காலை நேரமாக சென்றோம், மணி சரியாக தெரியவில்லை சுமார் 8.00 மணி இருக்கும், போலிசார் தரப்பில் அழைத்தார்கள், சென்றோம். அங்கு எவ்வளவு நேரம்இருந்திர்கள் என்றால் சுமார் 20 நிமிடம். வேறு வழக்கிற்கு சென்றுவிட்டு அங்கு வந்தோம்.

4. வேறு வழக்கிற்காக எத்தனைமணிக்கு சென்றிர்கள் என்றால் மணி சரியாக ஞாபகம் இல்லை. காலையல் சென்றோம். எந்த பூமி எந்த ஆயக்கட்டிற்கு சேர்ந்தது என்று முத்துகுமார் விசாரித்தார்களா என்றால் இநத் பூமி ஆயக்கட்டிற்கு சேர்ந்ததா என்று கேட்டார்கள் ஆமாம் என்று சொன்னேன். எதிரி சௌந்தர்ராஜன் கோயம்புத்தூரில் தங்கி உள்ளார் என்றாலும் இங்கு வந்து விவசாயம் நேரடியாக பார்ப்பது இல்லை என்றாலும் சரிதான். சர்வே எண், விஸ்தீரனம் மற்றும் ஆயக்கட்டு பாசனம் பற்றி போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளிர்கள் என்றால் ஆமாம்.

5. இந்த பூமிகள் அனைத்தும் PAP வாய்க்கால் பாசனத்திற்கு உட்பட்டது என்று அசா.1 முத்துகுமார் மற்றும் SI க்கு நீங்கள் சொல்லியுள்ளிர்கள் என்றால் ஆமாம். புகார் யார் எங்கு வைத்து கொடுத்தார்கள் என்று

தெரியாது என்றால் தெரியும். எப்போது கொடுத்தார்களள் என்றால் அன்றைய தினம் கொடுத்தார். போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் சொல்கிறிர்கள் என்றாலும் நீங்கள் சென்ற போது அவர் அங்கு இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.244 /2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சௌந்தர்ராஜன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 10.07.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் பூலாங்கிணறு கிளை வாய்க்காலில் பாசன உதவியாளராக பணிபுரிந்து 2021 ம் வருடம் ஓய்வு பெற்று விட்டேன். ஓய்வு பெற்று பின்னிட்டு பாசன வாய்க்காலுக்கு தற்காலிமாக உதவி பொறியாளர் பணி அமர்த்தினார். அப்போது 2021 –2023 வரை பணி செய்து வந்தேன். தற்போது வீட்டில் உள்ளேன். நான் பணிபுரிந்து போது பூலாங்கிணறு கிளை வாய்க்காலில் 20 மடைகிளை வாய்க்காலை பார்த்த வந்தேன். 27.04.2022 ம்தேதி தண்ணீர் திறந்துவிட்ட போதுகடை மடை விவசாயிகளுக்கு வாய்க்காலிருந்து தண்ணீர் வரவில்லை என்று புகார் கொடுத்தனர். நான் உதவி பொறியாளருக்கு தகவல் கொடுக்குமாறு சொன்னேன். கடை மடை விவசாயிகள் உதவி பொறியாளரிடம சொன்னார்கள். கடந்த 30.04.2022 ம்

தேதி நானும் அசா.1 மற்றும் அசா.2 கிராம நிர்வாக அலுவலர் அகியோர் ஒவ்வொரு மடையாக சென்று பார்த்தோம். அப்போது 6 –7 வாய்க்கால் 6 வது மடையில் பாசனத்திற்க தண்ணீர் விட்டிருந்தோம் அதிலிருந்து மண் வாய்க்கால் அமைத்து பைப் மூலமாக தண்ணீர் கிணற்றில் விடப்பட்டிருந்தது. அந்த இடம் சௌந்தர்ராஜன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று தெரிந்து கொண்டேன் புதியதாக வாங்கிய பூமி. கிணற்றுக்கு சர்வீஸ் இருந்தது. அதன் எண் தற்போது ஞாபகம் இல்லை. பின்னர் உதவி பொறியாளர் புகார் கொடுத்தார். போலிசார் என்னை 01.05.2022, 03.05.2022 ம் தேதிகளில் விசாரித்தார்கள்

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. போலிசார் விசாரணையில் தற்காலிமாக பணி செய்வதகாவும் பணியில் இருந்து ஓய்வு பெற்று விட்டதாகவும் சொல்லவில்லை என்றால் ஆமா ம். போலிசார் விசாரணையில் என்ன வேலை செய்து வந்ததாக சொன்னிர்கள் என்றால் லஸ்கர் வேலை செய்து வந்ததாக சொன்னேன். கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்ததாக சொல்லியுள்ளிர்களா என்றால் ஆமாம் என்று சொல்லிவிட்டு, சாட்சி பின்னிட்டு இல்லை எனதெரிவித்தார். லஸ்கர் வேலை செய்ததற்கான உத்தரவு ஆணை இல்லை என்றால் சரிதான். உங்களுக்கு சம்பளம் யார் கொடுப்பார் என்றால் உதவி பொறியாளர் தனியாக தருவார். எவ்வளவு சம்பளம் என்றால் பத்தாயிரம் ரூபாய். உதவியாளராக பணிபுரியவில்லை என்றாலும் உதவி பொறியாளர் கேட்டுகொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியமசொல்கிறிர்கள் என்றால் இல்லை. அவர் தான் சாட்சி சொல்ல அழைத்தார் என்றால் போலிசார் சம்மன் தந்தார்கள். 6 வது மடையில் எத்தனை ஏக்கர் பாசனம் பாய்ந்து வருகிறது என்றால் 40 ஏக்கர். அதில் சௌந்தரராஜனுக்கு எத்தனை ஏக்கர் என்று தெரியுமா என்றால் தெரியாது. அவர் பூமி ஆயக்கட்டிற்கு சேர்ந்தது என்றால் ஆமாம். எதிரிக்கு கிணற்றில் போர் உள்ளது என்றால் தெரியாது ஆனால் 2 இன்ச் பைப்கள் இருந்தது. தண்ணீர் எத்தனை வருடத்திறகு ஒரு முறை வரும் என்றால் 2 வருடத்திறகு ஒரு முறை 5 நாட்கள் வரும். எதிரியின் பூமியில் என்ன விவசாயம் என்றால் தென்னை மர விவசாயம். தென்னை மர

விவசாயத்திற்கு சொட்டு நீர் பாசனம் பாய்ச்சுவார்கள் என்றால் எதிரி வாய்க்கால் மற்றும சொட்டு நீர் பாசனம பாய்ச்சுவார். எதிரிக்கு எத்தனை நாள் கெடு என்று தெரியாது என்றால் தெரியாது. மணி கணக்கில் போட்டு தண்ணீரை பங்கி பாய்ச்சுவார்கள் என்றால் சரிதான். நீங்கள் சம்பவ இடத்திற்கு போன போது எதிரியின் கெடு தண்ணீர் என்றால் ஆமாம். உதவி பொறியாளர் கேட்டு கொணடதற்கு இணங்க பொய்யாக சாட்சியம அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. 3 ம் தேதி போலிசார் எங்கு வைத்து விசாரித்தார்களள எனன்றால் சம்பவ நடந்த மடைக்குஅருகில் வைத்து. அப்போது தான் வாக்குமூலம் அளித்திர்கள் என்றால் சரிதான். யார் விசாரித்தார்கள் என்றால் SI தங்கவேல் விசாரித்தார்.

**மறுவிசாரணை** இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.